

காஞ்சிபுரம் மாநகரத்தில் – அமைச்சர் தா.மோ. அன்பரசனின் உதவியாளர் – முரசொலி மூத்த நிருபர் காஞ்சி கே.சம்பத் மகன் கே.எஸ்.செந்தில் முருகேசன் – ஆர்.பூங்கோதை மணவிழாவில் – முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (21.08.2023) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் குத்தம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து முனையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும், இதர பணிகளான மழைநீர் வடிகால் அமைப்பு, பேருந்து முனையத்தை முழுவதும் குளிரூட்டப்படும் (Fully Airconditioned) பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

திருவேற்காடு

# தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் - ரூ.25 கோடி மதிப்பில் திருப்பணிகள்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.22

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (21.07.2023) திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றின் கருங்கல் கட்டுமானத் திருப்பணி, அனைத்து உபசன்னதிகள் மற்றும் பிரகாரங்களின் திருப்பணியைத் தொடங்கி வைத்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கருங்கல் கட்டுமான திருப்பணி, தரைநிலையை உயர்த்துதல், உட்பிரகாரம் மற்றும் வெளிப்பிரகாரங்களிலுள்ள அனைத்து உபசன்னதிகளுக்கும் திருப்பணி செய்திட ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டிருகின்றது.

இதில் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.5 கோடி மதிப்பீட்டிலும், உபயதாரர் நிதியிலிருந்து ரூ.2.5 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதோடு 25 உபசன்னதிகளுக்கு ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்யப்படவுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் முதல் 10 திருக்கோயில்களில் பெருந்திட்ட வரைவு (Master Plan) வாயிலாக திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.300 கோடி மதிப்பீட்டிலும், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலில் ரூ.170 கோடி மதிப்பீட்டிலும், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் ரூ.99 கோடி மதிப்பீட்டிலும், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.103 கோடி மதிப்பீட்டிலும், இராமேஸ்வரம், இராமநாத சுவாமி திருக்கோயிலில் ரூ.159 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை, அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.78 கோடி மதிப்பீட்டிலும், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.64 கோடி மதிப்பீட்டிலும், வடலூர் அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் ரூ.99.90 கோடி மதிப்பீட்டிலும், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் ஒட்டுமொத்தமாக ரூ.80 கோடி மதிப்பீட்டிலும், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.70 கோடி மதிப்பீட்டிலும் என 10 திருக்கோயில்களுக்கு பெருந்திட்ட வரைவு பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் நடப்பாண்டில் வயலூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மேல்மலையனூர், அங்காளம்மன் திருக்கோயில், அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில், மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சிறுவாபுரி, பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் என 5 திருக்கோயில்களுக்கு ரூ.200 கோடி மதிப்பீட்டிலும் பெருந்திட்ட வரைவு மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டம், துளசியாபட்டினத்தில் தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு மணிமண்டபமும், மயிலாப்பூரில் திருவள்ளுவருக்கு திருக்கோயிலும், கலாச்சார மையமும், சோளிங்கரில் மன நல காப்பகமும் ரூ.65 கோடி மதிப்பீட்டிலும் ஏற்படுத்தப்பட இருக்கின்றது.

அதேபோல் கொளத்தூரில் சோமநாத சுவாமி திருக்கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருநெல்வேலி, காந்திமதி அருள்தரும் நெல்லையப்பர் திருக்கோயில் என 3 திருக்கோயில்கள் சார்பில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் மூத்த குடிமக்களுக்கு காப்பகங்கள் ஏற்படுத்தி இருக்கின்றோம்.

இப்படி இந்து சமய அறநிலைத்துறையில் திருப்பணிகள் ஒருபுறமும், மூத்த குடிமக்களை பாதுகாக்கின்ற பணிகள் மறுபுறமும், கலாச்சார மையங்கள், பண்பாட்டுச் சின்னங்களை பாதுகாக்கின்ற நோக்கத்தோடு ரூ.1400 கோடி செலவில் 23 பணிகளை எடுத்து இந்து சமய அறநிலையத்துறை நிறைவேற்றுவதற்கு உண்டான அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளுக்கு பெருந்துணையாய் இருக்கின்ற அரசு உயர் அலுவலர்களுக்கும், அறங்காவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீட் தேர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கருணையைக் காட்டுகின்றவராகவும், நீட் தேர்விற்குத் தடை விதிக்க வேண்டும் என்ற உறுதியோடு துணிந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அ.தி.மு.க. மாநாடு என்பது கூடினார்கள், பேசினார்கள், கலைந்தார்கள் அவ்வளவு தான்.**

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் என்.கே.மூர்த்தி, இணை ஆணையர் திருமதி ஜ.முல்லை, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் பி.ஏ.சந்திரசேகர ரெட்டி, ப.கோவிந்தசாமி, திருமதி வளர்மதி, பா.சாந்தகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் - இதுவரை 1.63 கோடி விண்ணப்பங்கள்!

# கள ஆய்விற்கு வரும் அலுவலர்களுக்கு உரிய தகவல்கள் அளித்திடுவீர்!

## விண்ணப்பதாரர்களுக்கு அரசு வேண்டுகோள்!

சென்னை, ஆக. 22

'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் இதுவரை 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. என அரசு அறிவித்துள்ளது.

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 24.7.2023 அன்று தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைக்கப்பட்டு விண்ணப்பப் பதிவு முகாம்கள் இரண்டு கட்டங்களாகவும் மற்றும் விடுபட்டவர் களுக் கான சிறப்பு முகாம்களும் தொடர்ந்து நடத்தப்பட்டு 20.08.2023 அன்றுடன் விண்ணப்பங்கள் பதி யும் பணி நிறைவடைந்தது.

முதற்கட்ட முகாம்கள் ஜூலை 24 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 04 ஆம் தேதி வரை நடைபெற்றது. இரண்டாம் கட்ட முகாம்கள் ஆகஸ்ட் 05 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை நடைபெற்றது. விடுபட்டவர்களுக்கான சிறப்பு முகாம்கள் ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டு மொத்தமாக 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டு கைபேசி செயலி வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களில் அளிக்கப்பட்ட தகவல்களை தேவையேற்படின் சரிபார்க்க களஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. களஆய்விற்கு வரும் அலுவலர்களுக்கு விண்ணப்பதாரர்கள் உரிய தகவல்களை அளித்து தகுந்த ஒத்துழைப்பு தருமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.


